[1973 நவம்பர் 30

பருப்பு வகைகள் குறித்த கருத்தரங்கு

* 494 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சனவரி 15-ம் தேதி தஞ்சையில் நடைபெற்ற பருப்பு வகைக் கருத்தரங்கின் 3-வது குழுவின் பரிந்துரைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மேசையின்மீது விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஜனவரி 15-ம் தேதியில் தஞ்சையில் நடைபெற்ற பருப்பு வகைக் கருத்தரங்கின் மூலம் நல்ல பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அது விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதுபோன்ற கருத்தரங்கு தனித்தனியாக எல்லா உணவு தானியங்களுக்கும் நடத்தி, அதன் பயன்களை விவசாயிகளுக்கு அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, அந்த கருத்தரங்கில் எல்லாத் தானியங்களும் தனித்தனியாக ஆராயப்பட்டன. அவரை முதல் துவரை வரை எல்லா பருப்பு வகை பற்றியும் ஆராயப்பட்டது.

New Regional Research Station at Payyur

* 495 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Agricultural University, Coimbatore to set up a Farm Research Station at Payyur near Krishnagiri; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) 44.65 ஏக்கர் பரப்பளவில் 2 லட்சம் ரூபாய் செலவில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் உழவர்களுக்குத் தேவைப்படுகின்ற பயிர் வளர்த்தல், மண்வள நீர்

@ 280-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.
பட்டுள்ளது.

1973 நவம்பர் 30]

நிர்வாகம், வேளாண்மை பொறியியல், பாற்பண்ணை, கோழி வளர்ப்பு முதலியவை குறித்து ஆராய்ச்சி செய்வதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, மாவட்டந்தோறும் இவ்வித பண்ணை அமைத்து, அங்கு நடத்தப்படுகின்ற ஆராய்ச்சியின் முடிவுகளை செயல்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: இந்த ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்கெனவே பல மாவட்டங்களில் இருக்கின்றன. ஆராய்ச்சி நிலையம் இல்லாத மாவட்டங்களில் ஆராய்ச்சி பண்ணை தேவை என்று அறிந்தால் அங்கே நிறுவுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இம்மாதிரி ஆராய்ச்சிப் பண்ணைகளிலிருந்து கிடைக்கின்ற நன்மைகளை விவசாயிகள் அடைவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி மூலமாகக் கிடைக்கின்ற நல்ல தகவல்களை விவசாயிகளுக்குத் தெரிவிக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் வேளாண்மைத் துறை அதிகாரிகள், டிப்டி அக்ரிகல்சர் ஆபிசர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயிகளைக் கூட்டி வைத்து, ஸ்லைடுகள் மூலமாகவும், விளம்பரங்கள் மூலமாகவும் புத்தகங்கள் மூலமாகவும் ஆராய்ச்சியின் பலன்களை விளக்கி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அந்த புத்தகங்கள், விளம்பரங்கள் அடங்கிய ஒரு கட்டினை அனுப்பிவைக்க எண்ணியுள்ளேன்.

திரு. சி. ஆறுமுகம்: ஆங்காங்கே இருக்கின்ற பிளாக்குகளில் விவசாய விஸ்தரிப்பு அதிகாரிகள் அனுப்பப்பட்டு, ஆராய்ச்சியின் நன்மைகளை விளக்குவதாகச் சொன்னார்கள். இனிமேல் ஆங்காங்கே இருக்கின்ற ஆராய்ச்சிப் பண்ணைகளில் விவசாயிகளை நேரடியாக ஈடுபடச் செய்தால் இன்னும் வேளாண்மைத் துறையில் அதிக முன்னேற்றம் ஏற்பட்டு, உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அப்படி ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஏதாவது ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள பெரிய விவசாயிகளை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறார்கள் என்ற குறை இருக்கிறது. ஆகையால் மாதிரிப் பண்ணைகள் பல அமைத்து, எல்லா விவசாயிகளையும் அழைத்து, ஆய்வின் பலன்களை விளக்க வேண்டும் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது.

New Agricultural Seed Farms

* 496 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any proposal from the Agricultural University at Coimbatore on the question of starting an Agricultural Seed Farm in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*** 497 வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்திட அவைகளுக்கான விதைப் பண்ணைகளைத் துவக்கிடும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. என் கிட்டப்பா: தலைவரவர்களே, அவரை முதல் துவரை வரை ஆராய்ச்சி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் இனிமேலாவது ஆராய்ந்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இந்த காப்பி, தேயிலை, புகையிலை போன்ற பயிர்கள் எல்லாம் அவரை முதல் துவரை வரை என்ற பகுதியில் அடங்காது. காப்பிக்கு